செ.வெ.எண்-48 நாள்-29.07.2021

## அரியலூர் மாவட்டம்

## உணவுப் பொருட்கள் சேமிப்பு கிடங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திற்குட்பட்ட நியாயவிலைக்கடைகள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக இருப்பு வைக்கப்பட்டுள்ள அரிசி, கோதுமை சேமிப்பு கிடங்கு மற்றும் சாத்தமங்கலம் நெல் அறவை ஆலை மூலம் நெல் அறவை செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவா் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (29.07.2021) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததவாது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து பொதுமக்களுக்கும் தரமான உரிய உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் நலனுக்காக அனைத்து குடும்ப அட்டைதாரா்களுக்கும் கொரோனா நிவாரண நிதியாக தலா ரூ.2000/- வீதம் இரண்டு தவணைகளாகவும், 14 வகையான மளிகைப் பொருட்களையும் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்க உத்தரவிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் பொதுமக்களுக்கு தரமான மற்றும் உரிய உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வகையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் தனித்தனியே சேமிப்பு கிடங்கிலிருந்து உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் அரியலூர் வட்டத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு மாதந்தோறும் 1280 மெ.டன் அரிசி, 121 மெ.டன் சா்க்கரை, 235 மெ.டன் கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்கள் இச்சேமிப்பு கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இவ்வாறாக அனுப்பிவைக்கப்படும் உணவுப் பொருட்கள் அனைத்தும் தரமானதாகவும், உரிய அளவிலும் அனுப்பிவைக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இச்சேமிப்பு கிடங்கிற்கு உணவுப்பொருட்கள் வரத்து குறித்தும், இருப்புகள் குறித்தும், விநியோகம் குறித்தும் தொடர்புடைய ஆவணங்கள் மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சீரான முறையில் பொதுமக்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலமாக உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது, உறுதி செய்யப்படுகிறது.

மேலும், சாத்தமங்கலம் கிராமத்தில், அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அறவை செய்து நியாயவிலைக்கடைகளுக்கு விநியோகம் செய்யும் வகையில் மாதத்திற்கு 2500 மெ.டன் நெல்லினை அறவை செய்யும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி, இங்கு உற்பத்தி செய்யப்படும் 1700 மெ.டன் அரிசி அரியலூர் மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையினை ஏற்று, ஸ்ரீபுரந்தான், முட்டுவாஞ்சேரி மற்றும் தூத்தூர் உள்ளிட்ட கிராமங்களில் நெல் கொள் முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் அனைவரும் இச்சேவையினை பயன்படுத்தி தாங்கள் விளைவித்த நெல்லினை உரிய விலைக்கு விற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வழங்கல் அலுவலா் ரவிச்சந்திரன், மண்டல மேலாளா் குணசேகரன் மற்றும் அரசு அலுவலா்கள் பலா் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், அரியலூர்.**